பாராளுமன்ற வெளியீட்டு வரிசை இலக்கம் : 79

நிறுவனத்தின் பெயர் : பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

தொ .இ ல	அரசாங்க கணக்குகள் குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	சரிசெய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை
01	நி.ஒ. 134(2) இன் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தை உசாவி ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.	குறித்த காலப்பகுதியில், அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக இருந்ததுடன், எந்தவொரு உள்ளக கணக்காய்வுப் பிரிவும் இயங்கவில்லை. தற்போது, தலைமை உள்ளக கணக்காய்வாளர் ஒருவரின் கீழ் உள்ளக கணக்காய்வுப் பிரிவு நிறுவப்பட்டு, ஆண்டின் ஆரம்பத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்து உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது .
02	வருடாந்த பொருள் சுற்றாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட, குறைபாடுகள், மிகை மற்றும் பிற பரிந்துரைகள் உரிய காலத்திற்குள் செயற்படுத்தப்படவில்லை.	2022 ஆம் ஆண்டில் சிறிது தாமதம் ஏற்பட்டாலும் , அதன் பின்னர் தேவையான நடவடிக்கைகள் சரியான நேரத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளன.
03	அனைத்து வாகனங்களுக்குமான உரிமைப் பத்திரங்கள் அமைச்சு வசம் காணப்படாமை.	CAT- 7887, இல KJ- 7739 இல. PF- 7403 இல. PF- 7336, இல. CAC- 1724, இல. CAQ - 1754 மற்றும் இல. KY- 3614 ஆகிய வாகனங்கள் அப்போது உள்ளூராட்சி அமைச்சுக்கு சொந்தமான வாகனங்களாகும். மேலும் 2020ஆம் ஆண்டு இந்த அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சராக சரத் வீரசேகர அவர்கள் இந்த அமைச்சின் கடமைகளை பொறுப்பேற்ற போது, அவருக்கும் ஊழியர்களுக்கும் அந்த அமைச்சிலிருந்து கொண்டுவரப்பட்ட வாகனங்கள் இவையாகும். தற்போது, கௌரவ பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் ஊழியர்களுக்கும் அதே வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளதால், அந்த வாகனங்களை குறித்த அமைச்சிடம் ஒப்படைக்குமாறு பொது நிர்வாக , உள்நாட்டலுவல்கள் ,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது .அமைச்சின் பணியாளர்களுக்கு வழங்குவதற்கு வாகனங்கள் இல்லாத காரணத்தினால் அந்த வாகனங்களை விடுவிக்க முடியாதுள்ளது. மேலும், அந்த வாகனங்களை இந்த அமைச்சுக்கு மாற்றுவதற்கு பொது நிர்வாக , உள்நாட்டலுவல்கள் ,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு இணங்கவில்லை. மேற்படி இலக்க வாகனங்களை அரச நிர்வாக ,உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு வழங்குவதற்கு இந்த அமைச்சுக்கு வாகனங்களை வழங்குமாறு கொம்ப்லோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இலங்கை பொலிஸாருக்கு சொந்தமான முச்சக்கர வண்டி இலக்கம் ABV- 1283 மற்றும்

		ஜீப் இலக்கம் CBM- 2541 இந்த அமைச்சுக்கு தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளன. KO- 8807இலக்கம் கொண்ட வாகனத்தை இந்த அமைச்சுக்கு வழங்குமாறு துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கோரியுள்ளது. இது தவிர, மற்ற அனைத்து வாகனங்களின் உரிமையையும் உறுதிப்படுத்தும் கடிதங்கள் அமைச்சிடம் உள்ளன.
04	அனைத்து வாகனங்களுக்கும் அரச இலச்சினைப் பொறிக்கப்படவில்லை.	இந்த அமைச்சுக்கு சொந்தமான குழாத்திற்குரிய வாகனங்களில் அரச இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளன.
05	பயன்படுத்த முடியாதென ஒதுக்கப்பட்ட ஒரு வாகனம் 8 மாதங்களுக்கு மேலாகியும் அகற்றப்படவில்லை.	இந்த அமைச்சகத்திற்கு சொந்தமான பயன்பாட்டுக்கு உதவாதென நீக்கப்பட்ட வாகனங்கள் எதுவும் இல்லை.
06	ஒவ்வொரு வாகனத்திற்கும் பதிவுப் புத்தகங்கள் (லொக்) இற்றைப்படுத்தப்பட்ட அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை.	தற்போது இந்த அமைச்சில் பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களுக்கும் சரியாக இற்றைப்படுத்தப்பட்ட பதிவுப் புத்தகங்கள் பராமரிக்கப்படுகின்றன.
07	உரிய காலப்பகுதிக்கு அப்பால் ஒதுக்கீடுகள் மற்ற நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.	குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டாலும், ஒதுக்கீடுகள் பற்றாக்குறை ஏற்பட்டால் மட்டுமே, குறிப்பிட்ட காலத்திற்கு வெளியே ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தகைய நிகழ்வுகளைக் குறைக்க, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்/அதிகாரிகளுக்கு மிகவும் துல்லியமான முறையில் மதிப்பீடுகள் தயாரித்து ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
08	ஒரு வருடத்திற்கும் மேலாக கடன் நிலுவைகள் இருந்தன.	2022.12.31 ஆம் திகதி நிலுவையில் உள்ள கடன் ரூ.389,850 மற்றும் 2024.06.30 ஆம் திகதி நிலுவையில் உள்ள கடன் தொகை ரூ. 297,480 ஆகும் நிலுவையில் உள்ள கடன் தொகையை விரைவில் அறவிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறன. (இணைப்பு 01)
09	அங்கீகரிக்கப்பட்ட எல்லையை தாண்டி ஊழியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.	இந்த அமைச்சுக்கு 40 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மற்றும் 30 முகாமைத்துவ சேவை பதவிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. ஆனால் தற்போது 42 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் 22 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களும் பணிபுரிகின்றனர். அதற்கமைய, 8 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிகள் வெற்றிடமாகவும், 02 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் மிகையாகவும் காணப்படுகின்றன. ஆனால் 2024.06.07 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 14/2022 (IV) இன் பந்தி 2. 6 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு லீவு எடுத்த உத்தியோகத்தர்களின் பதவிகள் வெற்றிமாக கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, இந்த அமைச்சில் 39 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் 20 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களும் தற்போது

		கடமையாற்றி வருவதுடன், அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்கு அப்பால் பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. அது தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
10	2017.09.20 ஆம் திகதிய இலக்கம் 2017/4 ஆம் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின்படி, காலாண்டு முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் பணியாளர்களின் தகவல்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்படவில்லை.	2024.01.01 முதல் 2024.03.31 ஆம் திகதி வரையிலான காலாண்டு அறிக்கையும், 2024.04.01 முதல் 2024.06.30 வரையிலான காலாண்டு அறிக்கையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.
11	நிறுவனம் மூலம் பராமரிக்கப்படும் இணையதளம் பொதுமக்கள் முறைப்பாடுகளையோ, பாராட்டுக்களையோ பதிவு செய்ய அனுமதிக்கவில்லை.	இந்த அமைச்சின் முழு மேற்பார்வையின் கீழ் உள்ள 118 தேசிய சேவை மையத்திற்கு இணையவழி (Online) முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும். அதற்கு இணையதளத்தில் ஒரு இணைப்பு சேர்க்கப்பட்டுள்ளது. 2022.09.22 ஆம் திகதி முதல் இது வரை 10946 பேர் முறைப்பாடுகளைச் சமர்ப்பித்துள்ளனர். அந்த முறைப்பாடுகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு தீர்வுகள் வழங்கப்படும் அல்லது முறைப்பாடுகள் மற்றும் பரிந்துரைகளின்படி அடுத்த நடவடிக்கைகள் திட்டமிடப்படும். பெறப்பட்ட அனைத்து முறைப்பாடுகளும் கண்காணிக்கப்பட்டு, தேவையான தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தற்போது, நிறுவனம் குறித்த முறைப்பாடுகள் மற்றும் ஆலோசனைகளை பொதுமக்கள் சமர்ப்பிப்பதற்காக இணையத்தளத்தில் இணைப்பொன்றை சேர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
12	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் 50%க்கும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது.	2022 ஆம் ஆண்டில் அமைச்சு உத்தியோகத்தர்களுக்கு ரூ.500000.00 பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அப்போதைய கொரோனா தொற்றுநோய் காரணமாக பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்படாததாலும், ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்பட்டதாலும், குழு பயிற்சி நிகழ்ச்சிகள் நடைபெறததாலும் திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்த முடியாமல் போனது. எனவே, திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% க்கும் குறைவாகவே காணப்பட்டது.

13	நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் கீழ்நிலையில்/மறுக்கும் நிலையில்/பாதகமான நிலையில் காணப்பட்டது.	2022 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வின் அபிப்பிராயம் " கீழ்நிலை " காணப்பட்டது. அமைச்சு மற்றும் விசேட பணிக்குழுவின் நிதி அல்லாத சொத்துகளில் உள்ள தொடக்க இருப்பு சிக்கல் அதை பாதித்த முக்கிய காரணமாகும். அதோடு CIGAS இல் காணப்பட்ட தொழில்நுட்ப சிக்கல்களும் காரணமாக அமைந்தன. எனவே அவற்றைத் தீர்க்க அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இணைப்பு 01

பெயர்	பதவி	பதவியை வெறிதாக்கிய ஆண்டு	கடன் வகை	2022.12.31 ஆம் திகதி மீதி ரூ.	2023.12.31 ஆம் திகதி மீதி ரூ.	2023.06.30 ஆம் திகதி மீதி ரூ.	2022.12.31 ஆம் திகதி முதல் 2022.2024.06.30 ஆம் திகதி வரை முன்னேற்றம் ரூ.	2022.12.31 முதல் 2024.06.30 ஆம் திகதி வரை முன்னேற்றம் %
கொதடுவ	பொ.கா. 30454	2003	சொத்து	138,085	100,085	70,085	68,000	49%
பண்டார	பொ.சா.6770	2010	இடர்	18,128	11,078	7,078	11,050	61%
விக்கிரமசிங்க	பொ.கா. 53503	2013	இடர்	15,450	7,630	2,130	13,320	86%
சுவர்ணதிலக்க*	பொ.சா. 24021	2004	சொத்து	218,187	218,187	218,187	0	0%
மொத்தப் பெறுமதி				389,850	336,980	297,480	92,370	23%

*சுவர்ணதிலக அதிகாரிக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடுத்த வழக்குத் திகதி 2024.08.29

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல - 79
நிறுவனத்தின் பெயர் - இலங்கைப் பொலிஸ்

தொ.இல	குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் /தற்போதைய நிலைமை
01	கணக்காய்வாளர் நாயகம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்கும் ஒரு மாதத்தினுள் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை	தாமதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டில் அனைத்துக் கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன .அவ்வாறே, 2023 ஆம் ஆண்டில் கணக்காய்வாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துக் கணக்காய்வு விசாரணைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன.
02	உள்ளகக் கணக்காய்வு விசாரணைகளுக்காக ஒரு மாதத்தினுள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை	தாமதங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
03	2020.08.28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 1 பகுதியின் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டகத்தினுள் நி.ஒ.விதி .756(6) இன் பிரகாரம் பண்டக் கணக்கெடுப்பு செய்யப்பட்டு உரிய தினத்தில் குறித்த அறிக்கை கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை .	2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை பொலிஸிற்குரிய அனைத்து இடங்களிலும் பண்டக் கணக்கெடுப்புச் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் பண்டக் கணக்கெடுப்பு அறிக்கையைக் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்குச் சமர்ப்பிக்கும் போது ஏற்பட்ட தாமதங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டில் கணக்கெடுப்பு உரிய திகதியில் நடாத்தப்பட்டது.
04	வருடாந்த பண்டக் கணக்கெடுப்பில் தெரிய வந்த மிகை ,குறைபாடுகள் தொடர்பான பரிந்துரைகளும் , ஏனைய பரிந்துரைகளும் உரிய காலப்பகுதியினுள் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை	2022 ஆம் ஆண்டிற்கான பண்டக் கணக்கெடுப்பின் மூலம் அவதானிக்கப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் தொடர்பான பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டன.

05	அனைத்து வாகனங்களிலும் அரச சின்னம் நிறம் தீட்டப்பட்டிருக்கவில்லை.	2002.02.25 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கைக் கடித இலக்கம் 01/2002 இற்கமைய, பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 26/92 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள வாகனங்கள் தவிர்ந்த, ஏனைய வாகனங்களுக்குத் திணைக்களப் பெயரைப் பொறித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது
06	வங்கி கணக்கிணக்க கூற்றுக்களில் தெரிய வந்த சீராக்கம் செய்ய வேண்டியிருந்த மீதிகள் தொடர்பில் நி.ஒ.விதி பிரகாரம் ஒரு மாத காலத்தினுள் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.	2022.12.31 ஆம் திகதியில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட செலுத்தி சீராக்கம் செய்யப்பட வேண்டிய மீதிகள் அடையாளம் காணப்பட்டு ஏற்கனவே செலுத்தித் தீர்க்கப்பட்டுள்ளன.
07	ஒரு வருடத்தை விட மேற்பட்ட காலம் தொடக்கம் இருந்து வருகின்ற நிலுவைக் கடன் மீதிகள் காணப்பட்டன.	2022.12.31 ஆம் திகதியில் 1772 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடன் மீதி ரூபா42.,485,814 ஆக இருந்ததுடன் 2024.05.31 ஆம் திகதியாகும் போது 310 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா7.,122,927 அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிகுதியாகவுள்ள கடன் மீதியில் மேலும் அறவிடப்பட முடியாத கடன் மீதியான ரூபா 9,074,954 தொகையான கடன் மீதித்தொகையை அரசாங்க நிதிச் சுற்றறிக்கை 01/2020 இற்கமைய பகிவமிப்பகற்காக கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது .அதன் பிரகாரம், மேலும் அறவிடப்படுவதற்குள்ள கடன் மீதியான ரூபா35 .,362,887 தொகையை அறவிட்டுக் கொள்வதற்கான வேலைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

08	பொது வைப்புக் கணக்கில் காலம் கடந்த வைப்பு தொடர்பில் நி.ஒ.விதி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2021.12.31 ஆம் திகதியில் 02 வருட காலத்தை விஞ்சிய வைப்புக் கணக்கின் மீதி ரூபா . 232,581,722 ஆக இருந்ததுடன் அந்த வைப்பு மீதியில் ரூபா.202,093403, தொகையொன்று 2024.06.30 ஆம் திகதியளவில் செலுத்தித் தீர்க்கப்பட்டுள்ளதோடு அன்றைய திகதியில் செலுத்தித் தீர்க்கப்பட வேண்டிய தொகையான ரூபா30.,488,319 தொடர்பில் நி.ஒ.வித 571 இன் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
09	நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வுக் கருத்துரை நிராகரிக்கும் மட்டத்தில் அல்லது பாதகமான மட்டத்தில் காணப்பட்டது ..	2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை பொலிஸின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள கணக்காய்வுக் கருத்துரை நிராகரிக்கும் மட்டத்திலான அல்லது பாதகமான மட்டத்திலான ஒரு கணக்காய்வு கருத்துரையல்ல என்பதோடு முனைப்பளியுள்ள கணக்காய்வுக் கருத்துரையாகும்.
10	ஆகக் கூடிய சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள அலுவலர்களை உரியவாறு இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் PSC/EST/05-04-63/01/2022 ஆம் இலக்க 2022.06.17 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள இலங்கை பொலிஸின் இடமாற்ற நடைமுறையை அமுல்படுத்துவதற்காக வெளியிடப்பட்டுள்ள 2022.09.08 ஆம் திகதிய 2735/2022 ஆம் இலக்க பொலிஸ்மா அதிபர் சுற்றறிக்கையின் மூலம் இலங்கைப் பொலிஸ் அலுவலர்களின் இடமாற்ற நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வெளியீட்டு வரிசை இலக்கம் :- 79

நிறுவனத்தின் பெயர் :- குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

தொ.இல	அரசாங்க கணக்குகள் குழுவினால் அடையாளம் காணப்பட்ட அவதானிப்புக்கள்	அது தொடர்பில் திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய முன்னேற்றம்
	முதலாவது பகுதி	
01	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமரப்பிக்கப்பட்ட அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் ஒரு மாதக் காலப்பகுதியினுள் பதில் அளிக்கப்படவில்லை.	கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிக்கும் போது தாமதம் ஏற்பட்ட போதிலும் எதிர்காலத்தில் உரிய காலத்தில் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.
02	மீளாய்வுக்குரிய வருடத்திற்குள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் உரிய முறையில் நடாத்தப்படவில்லை.	2023 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் உரிய முறையில் நடைபெறுகின்றன.
03	அனைத்து வாகனங்களினதும் உரிமத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கைவசம் இல்லாமை.	திணைக்களத்திற்குரிய வாகனங்களில் ஒரு வாகனம் தவிர்ந்த ஏனைய அனைத்து வாகனங்களும் திணைக்களத்திற்குச் சொந்தமானது. நிதி அமைச்சினால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள NB-6469 எனும் வேன் வண்டியை திணைக்களத்திற்கு கையகப்படுத்துவதற்கு நினைவூட்டல் கடிதங்கள் சில அனுப்பப்பட்டுள்ளன.
04	அனைத்து வாகனங்களிலும் அரசாங்க இலச்சினைப் பொறிக்கப்படாமை.	இந்தத் திணைக்களத்திற்குரிய அனைத்து வாகனங்களும் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டங்களை மீறும் வெளிநாட்டவர்களை கைதுசெய்வதற்கும் புலனாய்வுகளை மேற்கொள்வதற்கும் சந்தர்ப்பத்திற்கேற்ப பயன்படுத்தப்படுவதனால் இந்த வாகனங்களில் அரச இலச்சினையைப் பதிப்பதன் மூலம் அத்தகைய புலனாய்வுப் பணிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும். மேலும் தற்போது அனைத்து வாகனங்களிலும் திணைக்களத்தின் பெயர் எழுதப்பட்ட போட் முன்னால் தெரியும் வகையில் முன் கண்ணாடிக்குள்ளால் வைக்கப்பட்டுள்ளது.
05	வாகனமொன்று முழுமையாக சேதமடைந்து 8 மாதங்களுக்கு குறைந்த காலப்பகுதியில் அகற்றப்படவில்லை.	தற்போது திணைக்களம் வசம் முழுமையாக சேதமடைந்த வாகனங்கள் இல்லை.

<table>
<tr><td>06</td><td>வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மூலம் கண்டறியப்பட்ட செம்மையாக்கம் செய்யப்பட வேண்டியிருந்த மீதிகள் தொடர்பில் நி.ஒ. பிரகாரம் ஒரு மாதத்திற்குள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.</td><td>வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மூலம் கண்டறியப்பட்ட செம்மையாக்கம் செய்யப்பட வேண்டியிருந்த மீதிகள் தொடர்பில் நி.ஒ. பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, தற்போது நி.ஒ. பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>07</td><td>ஒரு வருடத்திற்கும் மேலாக நிலவிவரும் நிலுவைக் கடன் மீதிகள் காணப்பட்டன.</td><td>
<table>
<tr><th>விபரம்</th><th>கடன் மீதி ரூ.</th><th>தற்போதைய நிலை</th></tr>
<tr><td colspan="3">பணித்தடை செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள்</td></tr>
<tr><td>திரு. எம்.யு.எம். முன்சிர் (அதிகாரம்பெற்ற அலுவலர்)</td><td>107,526.00</td><td>2024.03.05ஆம் திகதி செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>திரு.எச்.கே.ஆர். ஏ. ஜயவர்தன (அதிகாரம்பெற்ற அலுவலர்)</td><td>72,496.00</td><td>உத்தியோகத்தருக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, கடன் மீதியை ஓய்வூதியத்திலிருந்து அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td colspan="3">பதவியை வறிதாக்கியுள்ள உத்தியோகத்தர்கள்</td></tr>
<tr><td>திரு. கே.ஜீ.சின்தக்க ஜயமால் - சாரதி</td><td>96,283.00</td><td>பிணையாளரிடமிருந்து அறவிடப்படுகின்றது.2024.06.31 ஆம் திகதிக்கு அறவிட வேண்டியுள்ள கடன் மீது ரூ.85,020.00ஆகும்.</td></tr>
<tr><td colspan="3">மரணமெய்திய உத்தியோகத்தர்கள்</td></tr>
<tr><td>திரு. அஜித் விஜேசூரிய – அலுவலக உதவியாளர்</td><td>54,757.22</td><td>கடன் மீதியை வெட்டிவிடுவதற்கு மேல்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.</td></tr>
</table>
</td></tr>
<tr><td>08</td><td>அனுமதியளிக்கப்பட்ட எல்லையை தாண்டி பணியாட்களை ஆட்சேர்த்தல்.</td><td>அனுமதியளிக்கப்பட்ட எல்லையை தாண்டி பணியாட்கள் ஆட்சேர்க்கப்படவில்லை.</td></tr>
</table>

09	2017.09.20ஆம் திகதிய 2017 இல 4 எனும் முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை பிரகாரம் ஆளணித் தகவல்கள், தவணையொன்று முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்படவில்லை.	ஆளணித் தகவல்களை தவணையொன்று முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
	இரண்டாம் பகுதி	
01	2018 ஜனவரி 24 ஆம் திகதி இல. 2018/02 எனும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய உரிய முறையில் தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை.	2018 ஜனவரி 24 ஆம் திகதி இல. 2018/02 எனும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய உரிய முறையில் மனிதவளத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
02	மொத்த பணியாட் தொகுதியினருக்கும் செயலாற்றுகை ஒப்பந்தமொன்றைத் தயாரித்து ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை.	மொத்த பணியாட் தொகுதியினருக்கும் செயலாற்றுகை ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
03	திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களின் அளவு %50 க்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களுக்கு உரிய முறையில் பயிற்சி சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
04	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வின் அபிப்பிராயம், கீழ் மட்டத்தில் / மறுக்கக்கூடிய பாதிப்பான மட்டத்தில் காணப்பட்டது.	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய அபிப்பிராயம் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் என்றபடியால் இந்த அபிப்பிராயத்திற்கு ஏதுவாகிய காரணிகள் எதிர்காலத்தில் நிகழாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
05	அனைத்து உத்தியோகத்தர்களும் சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனத்தை சமர்ப்பிக்கவில்லை.	சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனங்களைப் பெற்று அவற்றை வழங்காத உத்தியோகத்தர்களின் பெயர் பட்டியல் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களும் தற்போது தமது சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனத்தை சமர்ப்பித்துள்ளனர்.

பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் :- 79
திணைக்களத்தின் பெயர் :- ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம்

தொ. இல.	அரசாங்க கணக்குகள் குழுவினால் அடையாளம் காணப்பட்ட அவதானிப்புக்கள்	அது தொடர்பில் திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய முன்னேற்றம்
	முதலாம் பகுதி	
01.	அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினைப் பொறிக்கப்படாமை.	அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 36/92 (1) பிரகாரம் திணைக்கள குழாத்திலுள்ள வாகனங்களில் அரச இலச்சினைப் பொறிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளது.
02.	நி.ஔ 94(1) பிரகாரம் செலவினத் தலைப்புக்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் வருடத்தின் இறுதியில் எஞ்சிய ஒதுக்கீடுகளின் எல்லைகளைத் தாண்டி பொறுப்புக்கள் ஏற்கப்பட்டிருந்தன.	நி.ஔ.94(1) பிரகாரம் நிதி ஏற்பாடுகளின் எல்லைகளைத் தாண்டி பொறுப்புக்கள் ஏற்கப்படுவது வரையறுக்கப்பட்டிருந்த போதிலும் ஏற்புடைய வருடத்தின் வழங்கல் மற்றும் சேவைச் செலவுகளுக்கு வருடாந்த நிதி ஒதுக்கீடு பற்றாக்குறையாக உள்ள சந்தர்ப்பங்களில் நி.ஔ. 94(2) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளுக்கு அமைய இவ்வாறு பொறுப்புக்கள் ஏற்கப்பட்டன.
	இரண்டாம் பகுதி	
01	தயாரிக்கப்பட்டிருந்த மனிதவள திட்டத்தின் மூலம் பணியாட் தொகுதியின் நூற்றுக்கு 50 வீதத்திற்கு மேற்பட்டவர்களுக்கு வருடத்திற்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.	வரவுசெலவு மதிப்பீட்டின் மூலம் 2022 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு ரூ.1,000,000.00 ஆகும். அந்தத் தொகையினுள் திணைக்களத்தினால் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தயாரிக்கப்பட்ட பயிற்சித்திட்டத்திற்கு அமைய, நிறைவேற்று மற்றும் நிறைவேற்றுத் தரத்தைச் சேராத உத்தியோகத்தர்கள், பிரதான அலுவலகம், மாகாண அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய வகையில் 1242 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பட்டப் பின்படிப்பு பாடநெறியொன்றுக்கு அந்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து நிதியைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போன காரணத்தினால் ரூ.180,000 மேலதிக நிதி ஒதுக்கீட்டைப்பெற்று ரூ.1,180,000 மொத்த ஒதுக்கீடு உருவாக்கப்பட்டுள்ளது.
02	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வின் அபிப்பிராயம், கீழ் மட்டத்தில் / மறுக்கும் மட்டத்தில் / பாதிப்பான மட்டத்தில் காணப்பட்டது.	கணக்காய்வாளரினால் கணக்காய்வு அபிப்பிராயம் முனைப்பழியப்பட்டுள்ளது.

டிரான் அலஸ்
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு